I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE
DEPOSITIONS OF WITNESSES
(CHAPTER XXIII CODE OF CIVIL PROCEDURE)
DEPOSITIONS OF WITNESSES P.W.1
OS.NO.144/2019

**Name** : Banu
**Father/Husband Name** : Manoharan

**Age** : 58

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 18.09.2025**

இரு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**விசாரணை தொடங்கும் நேரம்: 12.55 p.m**

**D3 to D10 சார்பில் குறுக்கு விசாரணை**

எதிர்மனுதாரர் வசந்தா (D1) மற்றும் ஆறுமுகம் (D2) ஆகியோர்களுடன் தான் பிரச்சனை என்றால் சரிதான். மற்ற அரசு அதிகாரிகள் D3 to D10 ஆகியோர்களை formal party ஆக சேர்த்துள்ளேன் என்றால் சரிதான். உயில் என்று கூறிவிட்டு செட்டில்மெண்ட்டாக எழுதிவிட்டார்கள் என்று வழக்கு என்றால் சரிதான். 1 மற்றும் 2 வது பிரதிவாதிகள் தான் அவ்வாறு செய்தார்கள் என்றாலும் சார் பதிவாளர் அலுவலர்கள் எதுவும் செய்யவில்லை என்றால் சரியல்ல, முடியுமா என்ன ஏது என்று என்னை கேட்கவில்லை, கையெழுத்து மட்டும் தான் போட்டேன். அவர் விளக்கி சொல்லவில்லை. 3 நாட்கள் கழித்து தான் எனக்கு தெரியும்.

உயில் என்று சொல்லிவிட்டு செட்டில்மெண்ட் செய்தது 1 மற்றும் 2 பிரதிவாதிகள் தான் என்றால் சரிதான். அந்த செட்டில்மெண்ட் டீட் ல் நான் தான் கைரேகை வைத்தேன். சாட்சி சொல்கிறார் உயில் என்று சொல்லி

தான் வாங்கினார்கள். போட்டோ எடுத்தார்கள்.

நான் சார் பதிவாளர் அலுவலகத்தில் நான் தாக்கல் செய்த ஆவணத்தை வைத்து தான் பதிவு செய்து கொடுத்திருக்கிறார்கள் என்றாலும் என்னை ஏமாற்றி பொய் சொல்லி கூட்டிவந்தார்கள் என்று எனக்கும் 1 மற்றும் 2 பிரதிவாதிகளுக்கு தான் தெரியும் என்றால் சாட்சி சொல்கிறார் எழுதும்போது கூட என்னை அழைத்து செல்லவில்லை என்னை தனியாக உட்கார வைத்திருந்தார்கள்.

23.10.2018 ல் நான் தாக்கல் செய்த செட்டில்மெண்ட் பத்திரத்தை பதிவு செய்து கொடுத்தார்கள் என்றாலும் அதில் சார் பதிவாளர் அலுவலரின் பணி குறைபாடுகள் எதுவும் இல்லை என்றாலும் சரியல்ல, உனக்கு சம்மதமா என்று கேட்கவில்லை. அவர்கள் பணி குறைபாடுகள் எதுவும் இல்லாமல் பதிவு செய்து கொடுக்கிறார்கள் என்றால் சரியல்ல.

03.01.2019 செட்டில்மெண்ட் டீட் மற்றும் 23.10.2018 செட்டில்மெண்ட் டீட் ஆகிய இரண்டு செட்டில்மெண்ட் பத்திரங்கள், அந்த இரண்டு பத்திரங்களிலும் சார் பதிவாளர் அலுவலரின் பணி குறைபாடுகள் எதுவும் இல்லை என்றாலும் சரியல்ல.தலைமை பதிவாளரிடம் புகார் ஏதேனும் கொடுத்தேனா என்றால் இல்லை.

நான் கேட்டுள்ள பரிகாரத்தில் வருங்காலத்தில் 3 மற்றும் 4 வது பிரதிவாதிகள் தாவா சொத்து சம்மந்தமாக வேறு எந்த ஆவணத்தையும் பதிவு செய்ய கூடாது என்று கேட்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவ்வாறு கூறி வழக்கறிஞர் மூலமாகவோ, நானோ 3 மற்றும் 4 பிரதிவாதிகளுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு கொடுக்கவில்லை என்றால் சரியல்ல, கொடுத்தோம். அவ்வாறு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

5 முதல் 7 பிரதிவாதிகள் தாவா சொத்து சம்மந்தமாக பட்டா எதுவும் மாற்றம் செய்ய கூடாது என்று பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் சரிதான். 8 வது பிரதிவாதி தாவா சொத்து சம்மந்தமாக வரி விதிப்பு கணக்கையும் மாற்றம் செய்ய கூடாது என்று தடை உத்தரவு கேட்டுள்ளேன் என்றால் சரிதான். பிரதிவாதிகள் 3 முதல் 10 வரை பிரதிவாதிகள் நீதிமன்ற உத்தரவு படி தான் எதிர்காலத்தில் செயல்படுவார்கள் என்றாலும் நான் எதிர்கால பரிகாரம் தான் கேட்டுள்ளேன் என்றாலும் என்னுடைய பரிகாரம் நிலைக்கத்தக்தல்ல என்றால் சரியல்ல. G- பரிகாரத்தில் SC No.202-007-472 என்ற மின் இணைப்பு எண்ணை பெயர் மாற்றம் செய்ய கூடாது என்று தடை உத்தரவு கேட்டுள்ளேன் என்றாலும் அது எதிர்கால பரிகாரம் என்றாலும் எனவே நீதிமன்ற உத்தரவு படி தான் செயல்படுத்த முடியும் என்றாலும் எனவே என்னுடைய பரிகாரம் நிலைக்கத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல.

3 முதல் 10 வரையான பிரதிவாதிகளை அவசியமில்லாத தரப்பினர்களாக வழக்கில் சேர்த்துள்ளேன் என்றாலும் அவர்களுக்கு எதிராக எந்த பரிகாரமும் கேட்கவில்லை என்றாலும் 3 முதல் 10 வரை பிரதிவாதிகளுக்கு எதிராக இந்த வழக்கை செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**விசாரணை முடிந்த நேரம்:** 01.20 p.m

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு கையெழுத்திட்டார்.

G SANTHI
Digitally signed by G SANTHI
Date: 2025.09.18 17:20:53 +0530

முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்.